12 OCT 2011
...astern University, Sri Lanka.

3R

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## புவியியற்துறை - கலை கலாசார பீடம்

**மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு**

**2009/2010 (August/September 2011)**

| | |
|---|---|
| **C 3102: சூழல் முகாமைத்துவம்**<br>**(Environmental Management)** | நேரம் 03 மணித்தியாலங்கள் |

- எவையேனும் நான்கு(04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.

1)

a. 'சூழலியல்' (*Ecology*), 'சூழல்தொகுதி' (*Ecosystem*) என்ற பதம் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(08 புள்ளிகள்)

b. உயிரினங்கள் வாழுகின்ற குறித்த ஒரு பௌதிக அமைவிடத்தைப் (*Habitat*) பாகுபடுத்தி, அவற்றில் உயிரினங்களின் பரம்பலை தீர்மானிக்கும் பிரதானமான காரணிகளைக் கண்டறிந்து விளக்குக.

(17 புள்ளிகள்)

2)

a. 'கழிவு' (*Waste*) என்னும் பதத்தினை வரையறுத்து, அதனை வகைப்படுத்துக.

(08 புள்ளிகள்)

b. திண்மக் கழிவுகள் எமது சூழலில் சேரும் வழிகளைக் கண்டறிந்து அவற்றால் சூழலுக்குத் தீங்கு ஏற்படாத வண்ணம் கட்டுப்படுத்த பொருத்தமான கழிவு முகாமைத்துவ திட்டம் ஒன்றினை மாநகர பிரதேசம் ஒன்றுக்கு எவ்வாறு முன்வைப்பீர் என விளக்குக.

(17 புள்ளிகள்)

3) "விவசாயத் துறையில் உட்புகுந்த நவீனத்துவங்கள் சூழல் சீர் குலைவிற்கே இட்டுச் செல்கின்றது"

a. விவசாய நவீனமயமாக்கம் (*Agricultural Modernization*) என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

b. விவசாயத்தில் பயன்படுத்தப்பட்டுவரும் நவீனத்துவங்கள் சூழலில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதை குறிப்பிடுக, அவற்றைக் குறைக்க எவ்வாறான நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும் என்பதனை சுருக்கமாக விளக்குக.

(20 புள்ளிகள்)